ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 2.8 – அணைவது

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.8 – அணைவது

‡ அணைவதரவணைமேல் ⋆
பூம் பாவை ஆகம் புணர்வது ⋆
இருவர் அவர் முதலும் தானே ⋆
இணைவன் ஆம் எப்பொருட்கும் ⋆
வீடு முதல் ஆம் ⋆
புணைவன் ⋆
பிறவிக் கடல் நீந்துவார்க்கே ‖ **2.8.1** ‖

நீந்தும் துயர்ப் பிறவி ⋆
உட்பட மற்றெவ்வெவையும் ⋆
நீந்தும் துயர் இல்லா ⋆
வீடு முதல் ஆம் ⋆
பூந் தண் புனல் பொய்கை ⋆
யானை இடர் கடிந்த ⋆
பூந் தண் துழாய் ⋆
என் தனி நாயகன் புணர்ப்பே ‖ **2.8.2** ‖

புணர்க்கும் அயன் ஆம் ⋆
அழிக்கும் அரன் ஆம் ⋆
புணர்த்த தன் உந்தியோடு ⋆
ஆகத்து மன்னி ⋆
புணர்த்த திரு ஆகித் ⋆
தன் மார்வில் தான் சேர் ⋆

புணர்ப்பன் பெரும் புணர்ப்பு ⋆
எங்கும் புலனே ॥ **2.8.3** ॥

புலன் ஐந்து மேயும் ⋆
பொறி ஐந்தும் நீங்கி ⋆
நலம் அந்தம் இல்லதோர் ⋆
நாடு புகுவீர் ⋆
அலமந்து வீய ⋆
அசுரரைச் செற்றான் ⋆
பல முந்து சீரில் ⋆
படிமின் ஓவாதே ॥ **2.8.4** ॥

ஓவாத் துயர்ப் பிறவி ⋆
உட்பட மற்றெவ்வெவையும் ⋆
மூவாத் தனி முதலாய் ⋆
மூவுலகும் காவலோன் ⋆
மா ஆகி ஆமை ஆய் ⋆
மீன் ஆகி மானிடம் ஆம் ⋆
தேவாதிதேவ பெருமான் ⋆
என் தீர்த்தனே ॥ **2.8.5** ॥

தீர்த்தன் உலகளந்த ⋆
சேவடி மேல் பூந் தாமம் ⋆
சேர்த்தி அவையே ⋆
சிவன் முடி மேல் தான் கண்டு ⋆
பார்த்தன் தெளிந்தொழிந்த ⋆
பைந் துழாயான் பெருமை ⋆

பேர்த்தும் ஒருவரால் ⋆
பேசக் கிடந்ததே ‖ **2.8.6** ‖

கிடந்திருந்து நின்றளந்து ⋆
கேழலாய்க் கீழ் புக்கிடந்திடும் ⋆
தன்னுள் கரக்கும் உமிழும் ⋆
தடம் பெருந் தோள் ஆரத் தழுவும் ⋆
பார் என்னும் மடந்தையை ⋆
மால் செய்கின்ற மால் ⋆
ஆர் காண்பாரே ‖ **2.8.7** ‖

காண்பார் ஆர் எம் ஈசன் ⋆
கண்ணனை என் காணுமாறு ⋆
ஊண் பேசில் ⋆
எல்லா உலகும் ஓர் துற்றாற்றா ⋆
சேண் பால வீடோ ⋆
உயிரோ மற்றெப் பொருட்கும் ⋆
ஏண் பாலும் சோரான் ⋆
பரந்துளன் ஆம் எங்குமே ‖ **2.8.8** ‖

எங்கும் உளன் கண்ணன் என்ற ⋆
மகனைக் காய்ந்து ⋆
இங்கில்லையால் என்று ⋆
இரணியன் தூண் புடைப்ப ⋆
அங்கப்பொழுதே ⋆
அவன் வீயத் தோன்றிய ⋆
என் சிங்கப் பிரான் பெருமை ⋆
ஆராயும் சீர்மைத்தே ‖ **2.8.9** ‖

சீர்மை கொள் வீடு ⋆
சுவர்க்கம் நரகீறா ⋆
ஈர்மை கொள் தேவர் நடுவா ⋆
மற்றெப் பொருட்கும் ⋆
வேர் முதலாய் வித்தாய்ப் ⋆
பரந்து தனி நின்ற ⋆
கார் முகில் போல் வண்ணன் ⋆
என் கண்ணனை நான் கண்டேனே ॥ **2.8.10** ॥

‡ கண் தலங்கள் செய்ய ⋆
கரு மேனி அம்மானை ⋆
வண்டலம்பும் சோலை ⋆
வழுதி வள நாடன் ⋆
பண் தலையில் சொன்ன தமிழ் ⋆
ஆயிரத்திப்பத்தும் வல்லார் ⋆
விண் தலையில் வீற்றிருந்தாள்வர் ⋆
எம்மா வீடே ॥ **2.8.11** ॥

அடிவரவு — அணைவது நீந்தும் புணர்க்கும் புலன் ஓவா தீர்த்தன் கிடந்து காண்பார் எங்கும் சீர்மை கண் எம்மா

அணைவது முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்